உ

சிவமயம்

# நாற்பத்தாறாம் திருமுறை மாநாடு - 2026

# திருமுறைப் போட்டிகள்

(http://www.singaithirumurai.org)

அன்புடையீர், வணக்கம்.

கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாகச் சிங்கப்பூரில் திருமுறை மாநாடு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருவதோடு சிங்கப்பூரில் மிகப்பெரிய அளவில் ஒரு தாக்கதையும் ஏற்படுத்தி வருகிறது. அதற்கு உங்களின் உணர்வுப் பூர்வமான ஈடுபாடும் உங்களிடையே ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்வுமே முக்கியக் காரணங்கள். இவ்வாண்டும் (2026) வருகிற ஜூலை மாதம் 31 ஆகஸ்ட் 1, 2 ஆகிய தேதிகளில் நாற்பத்தாறாம் திருமுறை மாநாடு நடைபெற உள்ளது. திருமுறைகளை இளையர்களிடம் பரப்புவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு நடத்தப்படும் போட்டிகளில் கடந்த 2024 ஆண்டு முதல் தொடங்கநிலை மாணவர்கள் கலந்துகொள்ளும் திருவேடப்போட்டியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதோடு புதிதாகத் தொடங்கப்பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரைப்போட்டிகளும் 2024 ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அந்தப் போட்டிகளிலும் வழக்கமாக நடைபெறும் போட்டிகளிலும் போட்டியாளர்கள் திரளாகக் கலந்து கொள்ளுமாறும், போட்டியின் விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறும், பெற்றோர், ஆசிரியப்பெருமக்கள் முழு ஒத்துழைப்பைத் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம். கடந்த ஆண்டுகளைப்போல் இவ்வாண்டும் போட்டிகளுக்கு இணையத் தளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமுறைப் போட்டிகள் ஏற்பாட்டுக்குழுவின் சார்பில்,

டாக்டர் ஆ ரா சிவகுமாரன்
ஒருங்கிணைப்பாளர் - திருமுறைப்போட்டிகள்

I. திருமுறை வண்ணம் தீட்டும் போட்டி (C1,C2,C3) 22-3-26 ஞாயிறு, காலை 8.30
இடம்: அருள்மிகு செண்பகவிநாயகர் ஆலயம்

1. பாலர்பள்ளி மாணவர்களுக்கு உரியது. மூன்று (Nursery, K1, K2) பிரிவுகளாக நடத்தப்படும்.
2. வண்ணம் தீட்டுவதற்குரிய படம் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும். அதில் போட்டியாளர்கள் தாங்கள் கொண்டு வந்துள்ள வண்ணப் பென்சில்களால் வண்ணம் தீட்ட வேண்டும்.
3. போட்டி நடைபெறும்போது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பக்கத்தில் இருத்தலோ, என்னென்ன வண்ணங்கள் தீட்டவேண்டும் என்று கூறுதலோ கூடாது.

II. திருவேடப்போட்டி 22-3-26 (தொடக்கப்பள்ளி 1,2,3 மாணவர்களுக்கு உரியது) ஞாயிறு, காலை 8.30.
திருவேடப்போட்டி 22-3-26 (பாலர்பள்ளி மாணவர்களுக்கு உரியது) ஞாயிறு, காலை10.30.
இடம்: அருள்மிகு செண்பகவிநாயகர் ஆலயம்

1. திருவேடப்போட்டி ஆறு பிரிவுகளாக நடைபெறும். முதல் மூன்று பிரிவுகள் பாலர்பள்ளி மாணவர்களுக்கு உரியன. ஏனைய பிரிவுகள் தொடக்கப்பள்ளி 1,2,3 மாணவர்களுக்கு உரியன.
2. போட்டியில் கலந்துகொள்வோர் குறிப்பிட்ட நாயன்மார்களைப் போல் வேடமிட்டு மேடையில் தோன்ற வேண்டும். பொருத்தமான வேடமிட்டுத் தோன்றுபவர்களுக்கே அதிக மதிப்பெண்கள் வழங்கப்படும்.
3. ஒருவர் மட்டுமே வேடமேற்று வேடத்திற்குரிய பேச்சைப் பேச வேண்டும். ஒரு நிமிடத்திற்குள் அந்த வேடத்திற்கான பேச்சு இருத்தல் வேண்டும். அதற்குமேல் பேசுபவர்களின் கருத்து நடுவர்களால் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
4. உடம்பில் தாங்கி இருக்கும் பொருட்களைத் தவிர மேடையில் வேறு எப்பொருளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

திருவேடப்போட்டி: தேதி 22 மார்ச் 2026 ஞாயிற்றுக்கிழமை. 8.30AM
இடம் -அருள்மிகு செண்பகவிநாயகர் ஆலயம்

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | திருவேடப் போட்டிக்கான நாயன்மார்கள்/ திருமுறை ஆசிரியர்கள் தோற்றம். |
|---|---|---|---|
| F1/ N | *2.1.2022கும் 1.1.2023கும் இடையே பிறந்தவர்கள்* | 22-3-26 | 1. ஆனாய நாயனார் 2. அப்பூதி அடிகள் நாயனார் 3. காரைக்காலம்மையார் 4. திருநாவுக்கரசர் 5. மாணிக்கவாசகர் |
| F2/ K1 | *2.1.2021கும் 1.1.2022க்கும் இடையே பிறந்தவர்கள்* | 22-3-26 | |
| F3/ K2 | *2.1.2020கும் 1.1.2021க்கும் இடையே பிறந்தவர்கள்* | 22-3-26 | |
| F4/ P1 | *2.1.2019க்கும் 1.1.2020க்கும் இடையே பிறந்தவர்கள்* | 22-3-26 | 1. குங்குலியக் கலய நாயனார் 2. சேரமான் பெருமாள் நாயனார் 3. மங்கையர்க்கரசியார் 4. திருஞானசம்பந்தர் 5. சுந்தரர் |
| F5/ P2 | *2.1.2018க்கும் 1.1.2019க்கும் இடையே பிறந்தவர்கள்* | 22-3-26 | |
| F6/ P3 | *2.1.2017க்கும் 1.1.2018க்கும் இடையே பிறந்தவர்கள்* | 22-3-26 | |

**திருமுறைக் கட்டுரைப் போட்டி 22-3-26**
**(தொடக்கப்பள்ளி 4,5,6 மாணவர்களுக்கு உரியது) ஞாயிறு, காலை 9.00.**
**இடம்: அருள்மிகு செண்பகவிநாயகர் ஆலயம்**

**மாணவர்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றைப் பற்றி 150-200 சொற்களில் கட்டுரை எழுதவேண்டும். கட்டுரையை ஒரு மணி நேரத்தில் எழுதி முடிக்க வேண்டும்.**

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | கட்டுரைத் தலைப்புகள் |
|---|---|---|---|
| Essay 1 | தொடக்கநிலை 4,5,6 மாணவர்கள் | 22-3-26 9.30 AM | 1. திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார், 2. கோச்செங்க நாயனார், 3. நம்பியாண்டார் நம்பி |

1. மாணவர்கள் கட்டுரையைப் போட்டி நடைபெறும் நாளன்று நேரில் வந்து எழத வேண்டும்
2. போட்டி நடைபெறும் அன்று மாணவர்கள் எழுது பொருள்களையும் தாட்களையும் கொண்டு வர வேண்டும்
3. போட்டி நடைபெறும் அறைக்கு எந்தவிதமான குறிப்புகளையோ, புத்தகங்களையோ கொண்டு வரக்கூடாது.

**III. திருமுறை ஓதும் போட்டி**

**திருமுறை ஓதும் போட்டி நடைபெறும் இடங்கள்:**
**19-4-26 ஞாயிற்றுக்கிழைமை,காலை 8.30: இடம் அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம் குயின்ஸ் வே**
**5-7-26 ஞாயிற்றுக்கிழமை, காலை 8.30: இடம் செண்பக விநாயகர் ஆலயம்**

1. *திருமுறை ஓதும்போட்டி (R1-R13 & GR15-GR16) பிரிவுகளாக நடத்தப்பெறும்.*
2. போட்டிக்குரிய பாடல்கள் அருள்மிகு வீரமாகாளியம்மன் ஆலய ஓதுவார் தேவார இசைமணி சிவத்திரு முத்துக்குமரன் அவர்களால் பாடப்பட்டு ஒலிவட்டில் (Audio CD) பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஒலிவட்டினை http://www.singaithirumurai.org என்னும் இணையத்தளத்தின் மூலம் பெறலாம்
3. போட்டி நாளன்று தத்தம் பிரிவுகளுக்குள்ள பாடல்களைத் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்துப் பாடவேண்டும்.
4. சுதிப்பெட்டிக்கும் தாளத்திற்கும் தனியே மதிப்பெண்கள் இல்லையென்றாலும் அவற்றோடு பாடுவதை ஊக்குவிக்கிறோம்.
5. ஆண்கள் மேல்சட்டை அணியாமல் பாடுவதை ஊக்குவிக்கிறோம்.
6. கடந்த ஆண்டு இறுதிப் போட்டிகளில் முதற்பரிசு பெற்றவர்கள் இவ்வாண்டு அதே பிரிவில் தனி நபர் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது. எனினும் அடுத்த மேற்பிரிவில் அல்லது குழுப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பொதுப்பிரிவில் முதற்பரிசு பெற்றோர் ஒரு ஆண்டு இடைவெளி விட்டு அதற்கு அடுத்த ஆண்டு பங்கு பெறலாம்.
7. குழுப்போட்டிகளில் (GR15, GR16) ஆலயங்கள் மட்டுமே பங்கு பெறலாம். ஒவ்வோர் ஆலயத்திலிருந்தும் ஒவ்வொரு பிரிவிலும் இரு குழுக்கள் பங்கு பெறலாம். சிங்கப்பூர்க்

குடிமக்கள், நிரந்தரவாசிகள், S.Pass, Student Pass வைத்திருப்பவர்கள் மட்டுமே பங்கு பெறலாம். திருமுறைப் பாடல்களை மட்டுமே பாடலாம். (நேரம் ஒரு குழுவிற்கு 6 நிமிடங்கள் மட்டுமே). ஒரு குழுவில் 6 முதல் 8 பேர் வரையே இருக்கலாம்.

8. குழுப்போட்டி நடைபெறும்போது அந்தக்குழுவைச் சேர்ந்தோர் குழுவிற்கு முன் அமர்ந்து சைகைகள் காட்டுவதோ, தாளம் போடுவதோ, பாடலின் வரிகளை முணுமுணுப்பதோ கூடாது. அவ்வாறு செய்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும்.
9. பஞ்சபுராணம் போட்டியில் (GR12,13,14) கலந்துகொள்வோர் தாங்கள் பாட இருக்கும் ஐந்து பாடல்களையும் போட்டித் தொடங்குவதற்கு முன்பு நடுவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்
10. போட்டியில் பங்கேற்போர் http://www.singaithirumurai.org என்னும் இணையத்தளத்தின் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

<u>திருமுறை ஓதும் போட்டிகள்</u>

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | தேதி / நேரம் | போட்டிக்குரிய பாடல்கள் (ஒலி நாடாவைக் கேட்க) |
|---|---|---|---|
| R1-N | 2.1.2022க்கும் 1.1.23க்கும் இடையே பிறந்தவர்கள் | 5-7-26 8.30AM | 1. செல்வ நெடுமாடஞ் சென்று<br>2. பெருகலாந்தவம் பேதமை<br>3. கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை |
| R2-K1 | 2.1.2021கும் 1.1.2022க்கும் இடையே பிறந்தவர்கள் | 5-7-26 8.30AM | |
| R3-K2 | 2.1.2020க்கும் 1.1.2021க்கும் இடையே பிறந்தவர்கள் | 5-7-26 8.30AM | |
| R4-P1 | 2.1.2019க்கும் 1.1.2020க்கும் இடையே பிறந்தவர்கள் | 5-7-26 8.30AM | 1. பூவார் கொன்றைப் புரிபுன்<br>2. பூவினுக் கருக்கலம் பொங்கு தாமரை<br>3. முன்னவன் எங்கள்பிரான் முதல்<br>4. சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு |
| R5-P2 | 2.1.2018க்கும் 1.1.2019க்கும் இடையே பிறந்தவர்கள் | 5-7-26 8.30AM | |
| R6-P3 | 2.1.2017க்கும் 1.1.2018க்கும் இடையே பிறந்தவர்கள் | 5-7-26 8.30AM | |
| R7-P4 | 2.1.2016க்கும் 1.1.2017க்கும் இடையே பிறந்தவர்கள் | 5-7-26 8.30AM | 1 மருந்தவை மந்திர மறுமைநன்<br>2 சொன்மாலை பயில்கின்ற குயிலினங்<br>3 மற்றுப் பற்றெனக்கின்றி நின்<br>4 அன்னமாய் விசும்பு பறந்தயன் |
| R8-P5 | 2.1.2015க்கும் 1.1.2016கும் இடையே பிறந்தவர்கள் | 5-7-26 1.00AM | |
| R9-P6 | 2.1.2014க்கும் 1.1.2015க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-4-26 8.30AM | |
| R10-S1&2 | 2.1.2012க்கும் 1.1.2014க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-4-26 8.30AM | 1. மின்னு லாவிய சடையினர்<br>2. எல்லா உலகமு மானாய் நீயே<br>3. மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கை<br>4. பொன்னும் மெய்ப்பொருளும்<br>5. ஞானத்தின் திருவுருவை நான்மறை |
| R11- S3&4 | 2.1.2010க்கும் 1.1.2012க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-4-26 10.30AM | |
| R12 Open | 2.1.2000க்கும் 1.1.2009க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-4-26 11.00AM | பஞ்ச புராணம் (விரும்பிய பாடல்கள்) |
| R13 & R14 Open | 2.1.2009க்கு முன்பிறந்தவர்கள் | 19-4-26 8.30AM | பஞ்ச புராணம் (விரும்பிய பாடல்கள்) |
| GR15 குழுப் போட்டி | மேற்படி பிரிவு R4-R9ஐச் சேர்ந்தவர்கள் (6 முதல் 8 பேர் வரை) | 5-7-26 3.00PM | திருமுறைப் பாடல்கள் மட்டும் |
| GR16 குழுப் போட்டி | மேற்படி பிரிவு R10-R13ஐச் சேர்ந்துவர்கள் (6 முதல் 8 பேர் வரை) | 19-4-26 12.30PM | திருமுறைப் பாடல்கள் மட்டும் |

IV. திருமுறைப் பேச்சுப் போட்டி- 19-7-26 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30
இடம்: அருள்மிகு முனிஸ்வரர் ஆலயம் குயின்ஸ் வே

**திருமுறைப் பேச்சுப்போட்டி ஒன்பது பிரிவுகளாக நடைபெறும். குறிப்பிட்டப்பட்ட நேரத்திற்கு மேல் பேசும் பேச்சு நடுவர்களால் கருத்தில் கொள்ளப்படமாட்டாது**

IV. திருமுறைப் பேச்சுப் போட்டி-

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | பேச்சுப் போட்டித் தலைப்புகள் (இவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பேசலாம்) | பேசும் நேரம் |
|---|---|---|---|---|
| O1/ P1 | 2.1.2019க்கும் 1.1.2020க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-7-26 | 1. அமர்நீதி நாயனார்<br>2. திருநீலகண்டப் பதிகம் (அவ்வினைக்கு)<br>3. திருஉத்தரகோசமங்கை | 3 நிமிடங்கள் |
| O2/ P2 | 2.1.2018க்கும் 1.1.2019க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-7-26 | | |
| O3/ P3 | 2.1.2017க்கும் 1.1.2018க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-7-26 | | |
| O4/ P4 | 2.1.2016க்கும் 1.1.2017க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-7-26 | 1. பூசலார் நாயனார்.<br>2. ஆலவாய்ப் பதிகம் (வேத வேள்வியை)<br>3. திருச்செங்காட்டாங்குடி | 3 நிமிடங்கள் |
| O5/ P5 | 2.1.2015க்கும் 1.1.2016க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-7-26 | | |
| O6/ P6 | 2.1.2014க்கும் 1.1.2015க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-7-26 | | |
| O7/ S1&2 | 2.1.2012க்கும் 1.1.2014க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-7-26 | 1. பொய்யடிமை இல்லாத புலவர்.<br>2. திருவாசகம்<br>3. திருவிடைமருதூர் | 5 நிமிடங்கள் |
| O8/ S3&4 | 2.1.2010க்கும் 1.1.2012க்கும் இடையே பிறந்தவர்கள் | 19-7-26 | | |
| O9 Open | 2.1.2009க்கு முன்பிறந்தவர்கள் | 19-7-26 | 1. திருமுறையும் தமிழிசையும்<br>2 சே ஏந்து வெல்கொடியான் அடிச்சார்ந்தார் | 5 நிமிடங்கள் |

V. சுந்தரர் அருளிய மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே (கொடுமுடி) என்னும் திருப்பதிகம் பாராயணம்.

| பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | இடம் |
|---|---|---|
| 1-1-2004க்கு பின் பிறந்தவர்கள் 25வயதுக்குக் குறைந்தோர் | 19-7-26<br>8.30AM | அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம் குயின்ஸ் வே |

VI திருமுறைப் பயிற்சிக் கழகம். நிலை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு மதிப்பீட்டுத் தேர்வு
21-11-2026 சனிக்கிழமை, இடம்: அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம் குயின்ஸ் வே

**திருமுறைப் பயிற்சிக் கழகத்தின் நிலை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறுக்கான மதிப்பீட்டுத் தேர்வு நடைபெற உள்ளது. திருமுறைப் பயிற்சிக் கழகத்தினால் வெளியீடு செய்யப்பட்டுள்ள**

பாடத்திட்டங்களிலிருந்து வினாக்கள் கேட்கப்படும். பாடத்திட்டத்தை http://www.singaithirumruai.org என்னும் முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வு, வாய்மொழித் தேர்வு என இரு கூறுகளாகத் தேர்வுகள் நடத்தப்படும். தேர்வில் சிங்கப்பூரர்களும், சிங்கப்பூர் நிரந்தரவாசிகளும், சிங்கப்பூர் வேலை அனுமதிசீட்டு உள்ளவர்கள் மட்டுமே பங்கு பெறலாம். பதிவு செய்துகொள்ள வேண்டியது அவசியம். பதிவு செய்தவர்களே தேர்வுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

எழுத்துத் தேர்வை அந்தந்தப் பிரிவுகளுக்குரிய நேரத்திற்குள் எழுதி முடிக்க வேண்டும்.

வாய்மொழித் தேர்வில் பாடத்திட்டத்தில் உள்ள பாடல்களிலிருந்து பாடல்கள் கேட்கப்படும்.

தேர்ச்சி பெற்றோர்க்குச் சான்றிதழ்கள் மட்டுமே வழங்கப்படும்.

VII பொது

1. எல்லாப் போட்டிகளிலும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்யவோ அதற்குப் பதிலை எதிர்பார்க்கவோ இயலாது.

2. தொடக்கப்பள்ளி மாணவர்கள் கலந்துகொள்ளும் போட்டிகளைத் தவிர ஏனைய எல்லாப் பங்கேற்பாளர்களுக்கும் போட்டிகளில் பங்கு பெற்றதற்கான நற்சான்றிதழ்கள் வழங்கப்படும்.

3. திருமுறை ஓதும்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, வண்ணம்தீட்டும்,போட்டி, திருவேடப்போட்டி, திருமுறைப் பாராணம் ஆகியவற்றில் சிங்கப்பூர்க் குடிமக்கள், நிரந்தரவாசிகள் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

4. குழுப்போட்டிகளிலும், பஞ்சப்புராணம் ஓதும் போட்டிகளிலும் சிங்கப்பூர்க் குடிமக்கள், நிரந்தரவாசிகள், S.Pass, Student Pass வைத்திருப்பவர்கள் மட்டுமே பங்கு பெறலாம்.

5. இணையத்தளத்தின் மூலமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

6. 22-3-2026, 19-4-2026 தேதிகளில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்வோர் போட்டிக்குரிய விண்ணப்பங்களை 12-3-2026க்குள்ளும் ஏனைய தேதிகளில் நடைபெறும் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை 30-5-26க்குள்ளும் இணையத்தின் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். மேல் விவரங்களுக்கு 90616257, 98277780, 90059454 ஆகிய எண்களுடன் தொடர்பு கொள்க. இணையத்தள முகவரி (http://www.singaithirumurai.org)

திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்
திருச்சிற்றம்பலம்